Website: http://www.cict.in
Email: registrar@cict.in

Phone: 044-22540125
Fax: 044-22540143

# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

(தன்னாட்சி நிறுவனம், மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், இந்திய அரசு)
சாலைப் போக்குவரத்து நிறுவன வளாகம், நூறடிச்சாலை, தரமணி, சென்னை – 600 113

# CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL

(An autonomous Institution under Ministry of Human Resource Development, Government of India, New Delhi)
The Institute of Road Transport Campus, 100 Feet Road, Taramani, Chennai – 600 113

**கோ.எண். 11-264/செ.த.ம.நி./2020-21/குடியரசுத்தலைவர் விருதுகள்** **நாள்: 23.05.2020**

பெறுநர்

1. அனைத்து செயலாளர்கள், இந்திய அரசு.
2. தலைமைச் செயலாளர்கள், அனைத்து மாநில அரசுகள் / ஒன்றியப் பகுதிகள்.
3. செயலாளர்கள், கல்வித்துறை, அனைத்து மாநில அரசுகள் / ஒன்றியப் பகுதிகள்.
4. துணைவேந்தர்கள் / துறைத்தலைவர்கள் (பேராசிரியர்களாக உள்ளவர்கள்), இந்தியப் பல்கலைக்கழகங்கள் / மாநிலப் பல்கலைக்கழகங்கள் / நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள்.
5. தலைவர்கள், அனைத்து இந்தியத் தூதரகங்கள், இந்திய வெளியுறவுச் செயலர் வழியாக, வெளியுறவு அமைச்சகம், இந்திய அரசு.
6. கடந்த ஆண்டுகளில் தொல்காப்பியர் மற்றும் குறள் பீடம் விருதுபெற்றோர்.

**பொருள்:** செம்மொழித் தமிழுக்கான குடியரசுத்தலைவர் விருதுகள் (2019-2020) - தொல்காப்பியர் விருது (1), குறள் பீடம் விருது (2), இளம் அறிஞர் விருது (5) - முன்மொழிவுகள் வரவேற்பது – தொடர்பாக.

*****

**மதிப்பிற்குரியீர்,**

தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றின் மேம்பாட்டிற்கான தலைசிறந்த பணி செய்துள்ள பேரறிஞர்களைப் பாராட்டுதற்காகவும், இளம் அறிஞர்கள் மேலும் தமிழியல் ஆய்வில் ஈடுபட்டுப் பெரும்பங்களிப்பைச் செய்ய ஊக்குதற்காகவும் இந்திய அரசு செம்மொழித் தமிழுக்கான மத்தியத் திட்டத்தின்கீழ் எட்டு விருதுகளை வழங்க அனுமதி அளித்துள்ளது. எட்டு விருதுகளில், ஓர் இந்திய அறிஞருக்கான விருது தொல்காப்பியர் பெயரிலும், இரு விருதுகள் (ஒன்று அயல் நாட்டவருக்கும் மற்றொன்று அயல்நாட்டில் வாழும் இந்தியருக்கும்) குறள் பீட விருதுகள் என்னும் பெயரிலும், ஐந்து விருதுகள் 30 முதல் 40 வயது வரையுள்ள (விண்ணப்பங்கள் அலுவலகத்தைச் சேரும் இறுதி நாளில்) இளம் அறிஞர்களுக்கு இளம் அறிஞர் விருது என்ற பெயரிலும் வழங்கப்படும். விருதுகள் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. **தொல்காப்பியர் விருது** (மதிப்புச் சான்றிதழ், நினைவுப் பரிசு, ஐந்து இலக்கம் ரூபாய் பரிசுத் தொகை ஆகியவை இதில் அடங்கும்) - ஆண்டுதோறும் ஓர் இந்திய அறிஞருக்கு ஒரு விருது.
2. **குறள் பீடம் விருது** (மதிப்புச் சான்றிதழ், நினைவுப் பரிசு, ஐந்து இலக்கம் ரூபாய் பரிசுத் தொகை ஆகியவை இதில் அடங்கும்) - ஆண்டுதோறும் இரு விருதுகள் – அயல் நாட்டவருக்கு ஒன்று, அயல்நாடு வாழ் இந்தியருக்கு ஒன்று.
3. **இளம் அறிஞர் விருது** (மதிப்புச் சான்றிதழ், நினைவுப் பரிசு, ஓர் இலக்கம் ரூபாய் பரிசுத் தொகை ஆகியவை இதில் அடங்கும்) - ஆண்டுதோறும் ஐந்து விருதுகள். இவ்விளம்பரத்தின் இறுதிநாளுக்குள் முப்பது வயதிற்கும் நாற்பது வயதிற்கும் இடைப்பட்ட இந்திய இளம் அறிஞர்களுக்குரியது.

…2/-

**விருதுகளுக்கான தகுதிகள்:**

செவ்வியல் தமிழ் மொழிக்கும், இலக்கியத்திற்கும் அரிய பங்களிப்புச் செய்த புகழ்பெற்ற அறிஞர்களை அடையாளம்கண்டு போற்றும் நோக்கத்துடன் இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன. கி.பி. 600 வரையுள்ள செவ்வியல் தமிழின் பல துறைகளில் தேர்ந்த ஆராய்ச்சி நூல்கள் எழுதிப் பெரும்பெயர் பெற்ற விண்ணப்பதாரர்களே இவ்விருதுகளுக்கு உரியவராவர். இலக்கியம், இலக்கணம், மொழியியல், மொழிபெயர்ப்பு, வரலாறு, நுண்கலைகள், கட்டடக்கலை, தொல்லியல், நாணயவியல், கல்வெட்டியல், சுவடியியல், பண்பாடு ஆகிய துறைகளில் 1950 முதல் 2020 வரை (2019-20) பதிப்பிக்கப்பெற்றுள்ள நூல்களே கணக்கில் எடுத்துக்கொள்ளப்பெறும். விருதுகளுக்கான நெறிமுறைகள் யாவும் கீழே தரப்பட்டுள்ளன.

**நெறிமுறைகள் :**

1. பண்டைக்காலம் தொடங்கி கி.பி.600 வரையிலான தமிழியல் சார்ந்த இலக்கியம், இலக்கணம், மொழியியல், மொழிபெயர்ப்பு, வரலாறு, நுண்கலைகள், கட்டடக்கலை, தொல்லியல், நாணயவியல், கல்வெட்டியல், சுவடியியல், பண்பாடு முதலிய துறைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் விருதுபெறத் தகுதியுடையவை.
2. இந்தியா அல்லாத ஏதேனும் வேறு நாட்டினுடைய கடவுச்சீட்டு (செல்லுநிலையிலும் நடப்பிலுமுள்ளது) உடையவர் அயல்நாட்டவராவார்.
3. இந்தியாவின் கடவுச்சீட்டு உடையவரும் இந்தியா அல்லாத ஏதேனும் வேறு நாட்டில் வாழ்ந்துவருபவருமான ஒருவர் அல்லது முன்பு இந்தியக் குடிமகனாக இருந்து பின்பு வேறொரு நாட்டின் குடியுரிமை பெற்றிருக்கின்ற ஒருவர் அயல்நாடு வாழ் இந்தியராவார்.
4. இச்சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ள துறை அதிகாரிகள் தகுதியுடைய அறிஞர்களின் விண்ணப்பங்களைப் பரிந்துரைக்கலாம்.
5. விண்ணப்பப் பரிந்துரைகள் அறிஞர்களின் சிறப்பான பங்களிப்பைத் தெளிவாக எடுத்துக்காட்டுவதாக இருத்தல் வேண்டும். விண்ணப்பங்களோடு நன்னடத்தைச் சான்றிதழ் உரிய அதிகாரிகளால் கையொப்பமிட்டு இணைக்கப்படல் வேண்டும்.
6. விண்ணப்பங்களைப் பரிந்துரைக்கும்போது, அறிஞர்கள் அத்துறையில் சிறப்பான பணி செய்திருப்பதை வலியுறுத்தல் வேண்டும். இளம் அறிஞர் விருதுக்கான விண்ணப்பதாரர் செம்மொழித் தமிழில் ஏதேனும் ஒரு துறைக்கு அரிய பங்களிப்பைச் செய்திருக்க வேண்டும்.
7. ஏற்கனவே இந்த விருதுகளில் ஒன்றைப் பெற்றவர் மீண்டும் விண்ணப்பிக்கக் கூடாது. இறந்துபோன அறிஞர்கள் யாருக்கும் இவ்விருது அளிக்கப்பெறாது. ஏதேனும் குற்றவியல் வழக்கில் ஏற்கனவே தண்டிக்கப்பட்டவருக்கும், வழக்குமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பவருக்கும் விருது வழங்கப்பெறமாட்டாது. எனவே, விண்ணப்பதாரர் இதுபற்றிய உண்மையைக் கட்டாயமாக விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும். தவறான தகவல்கள் தரப்பட்டிருக்குமாயின், அதற்கு விண்ணப்பதாரரே முழுப்பொறுப்பாகக் கருதப்படுவார்.
8. அறிஞர்களை விருதுகளுக்காகப் பரிந்துரை செய்வோர் அதனை வெளியில் தெரியாமல் கமுக்கமாக வைத்துக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பிக்கும் அறிஞரைப் பற்றிய செய்திகளைப் பல வழிகளிலிருந்து பரிந்துரை செய்வோர் அறிந்துகொள்வது நல்லது. அறிஞர்கள் தனியாகத்தரும் தகவல்கள் எதுவும் பரிந்துரையோடு அனுப்பப்படுதல் கூடாது.
9. அறிஞர் எவரும் தம்மைத் தாமே விருதுக்காக முன்மொழிந்துகொள்ளல் கூடாது.

...3/-

10. ஏற்கனவே தொல்காப்பியர் விருது, குறள் பீடம் விருது ஆகியவற்றைப் பெற்றவர்கள் மட்டுமே இந்த ஆண்டிற்கான தொல்காப்பியர் விருது, குறள் பீடம் விருது, இளம் அறிஞர் விருது ஆகியவற்றிற்கான விண்ணப்பங்களைப் பரிந்துரைக்கலாம். சென்ற ஆண்டுகளில் இளம் அறிஞர் விருது பெற்றவர்கள் இந்த ஆண்டிற்கான விண்ணப்பம் எதனையும் பரிந்துரை செய்தல்கூடாது.

11. முன்மொழிவுகள் வன்படியிலும், மென்படியிலும் அனுப்பப்படுதல் வேண்டும்.

12. முன்மொழிவுகளைக் குறிப்பிட்டுள்ள படிவத்தில் நிறைவுசெய்து **இயக்குநர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், எண். 40, நூறடிச் சாலை, சாலைப் போக்குவரத்து நிறுவன வளாகம், தரமணி, சென்னை – 600 113** என்னும் முகவரிக்கு, **2020, ஜூன் 15ஆம்** நாளிற்குள் அஞ்சல் வழி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இணைப்பு: மேலுள்ளவாறு.

தங்கள் உண்மையுள்ள,

**(அ. பழனிவேல்)**

இயக்குநர்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

சென்னை – 600 113

**நகல்:**

1. இயக்குநர், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மானசகங்கோத்ரி, மைசூர் - 570006.
2. செயலாளர், தமிழ் வளர்ச்சித் துறை, தமிழ்நாடு அரசு, சென்னை - 600009.
3. இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை - 600113.

இறுதி நாள்: **15.06.2020**

## செம்மொழித் தமிழுக்கான குடியரசுத்தலைவர் விருதுகள் (2019-2020)

### முன்மொழிவுப் படிவம்

I. **பரிந்துரைக்கப்படும் விருது** (√ செய்க)

| | | |
|---|---|---|
| (அ) | **தொல்காப்பியர் விருது**<br>(இந்தியக் குடிமக்களுக்குரியது) | |
| (ஆ) | **குறள் பீடம் விருது** | |
| | (i) அயல்நாட்டவர் | |
| | (ii) அயல்நாடுவாழ் இந்தியர் | |
| (இ) | **இளம் அறிஞர் விருது** (30-40 வயது வரம்பிற்குள் வரும் இந்திய இளம் அறிஞர்கள்) | |

II. **பரிந்துரைக்கப்படும் துறைகள்** (√ செய்க)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இலக்கியம் | | இலக்கணம் | | மொழியியல் | | மொழிபெயர்ப்பு | |
| வரலாறு | | நுண்கலைகள் | | கட்டடக்கலை | | தொல்லியல் | |
| நாணயவியல் | | கல்வெட்டியல் | | சுவடியியல் | | பண்பாடு | |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| III. | **பரிந்துரைக்கும் அறிஞர் பெயர்** | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | முகவரி<br><br>தொலைபேசி எண்<br>மின்னஞ்சல் முகவரி | | | | | | | | | | | | |

**2019-2020 ஆம் ஆண்டிற்கான பரிந்துரை**

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | **பரிந்துரைக்கப்படும் அறிஞர் பெயர்** | | | | | | | | | | |
| 2. | முழு முகவரி<br><br>தொலைபேசி எண்<br>மின்னஞ்சல் முகவரி | | | | | | | | | | |
| 3. | (அ) பிறந்த நாள் | நாள் | | | மாதம் | | | ஆண்டு | | | |
| | | | | | | | | | | | |
| | (ஆ) வயது | | | | | | | ஆண்டுகள் | | | |

| | | |
|---|---|---|
| 4. | (அ) கல்வித் தகுதிகள் :<br>பல்கலைக்கழகத்தின் பெயர்,<br>ஆண்டு, வகுப்பு/தரம் | |
| | (ஆ) பணிவிவரங்கள் :<br>பணியாற்றிய நிறுவனம், பதவி,<br>பணியாற்றிய காலம் | |
| | (இ) சிறப்பறிவு பெற்றுள்ள துறை | |
| 5. | நூல்கள்/ வெளியீடுகள் :<br>(அ) எழுதியவை<br>(ஆ) பதிப்பித்தவை<br>(இ) மொழிபெயர்த்தவை<br>(நூற்பொருள்/மொழி) | |
| 6. | பரிந்துரைக்கப்படுபவரது<br>வழிகாட்டுதலில் பி.எச்.டி., டி.லிட்.<br>பட்டம் பெற்றுள்ள<br>ஆராய்ச்சியாளரின் எண்ணிக்கை | |
| 7. | ஏற்கனவே பெற்றுள்ள சிறப்புகள்<br>(அ) விருது, சிறப்புப்பட்டம்<br>முதலியன<br>(ஆ) ஆண்டு<br>(இ) வழங்கிய நிறுவனம் | |
| 8. | செம்மொழித் தமிழைப் பரப்பும்<br>வகையில் ஆற்றிய சிறப்புப்<br>பங்களிப்புப் பற்றிய விவரங்கள் | |
| 9. | கலந்துகொண்ட மாநாடுகள்/<br>கவியரங்குகள்/கருத்தரங்குகள்<br>(இடம், நாள், அமைப்பாளர்கள்,<br>ஆய்வுக்கட்டுரை போன்ற<br>விவரங்களுடன்) | |

| | | |
|---|---|---|
| 10. | செம்மொழித் தமிழோடு தொடர்புடைய முயற்சிகளிலும் பழந்தமிழ் மரபினையும் இன்றைய வளர்ச்சிகளையும் இணைக்கும் வகையிலும் ஆற்றியுள்ள சாதனைகள் | |
| 11. | இந்த அறிஞரைப் பரிந்துரைப்பதற்கான சிறப்புக் காரணங்கள், வலுவான சான்றுகள், ஏதேனும் இருப்பின்... | |

நாள் :

பரிந்துரைப்பவரின் கையொப்பம்

* **குறிப்பு : மேலே ஒதுக்கப்பட்டுள்ள இடம் போதவில்லையெனில் தனித்தாளில் விவரங்களை இணைத்து அனுப்பலாம்.**

**நன்னடத்தைச் சான்றிதழ்**

______________________________ என்பவரின் மகன்/மகள், ___________________________

__________________________________________________________ என்னும் முகவரியில்

குடியிருப்பவர் ஆகிய _______________________ என்னும் நான், ______________________

_____________________________________________ என்னும் முகவரியில் குடியிருப்பவரும்

செம்மொழித்தமிழ் விருதுக்கு முன்மொழியப்படுபவரும் ஆகிய திரு/திருமதி/செல்வி

_________________________________என்பவரைக் கடந்த __________________________

ஆண்டுகளாக அறிவேன் என்றும் அவர் நல்லொழுக்கம் உடையவர் என்றும் இதன்மூலம் உறுதிகூறுகின்றேன். அவருக்கு எதிராக நீதிமன்ற வழக்கு எதுவும் நிலுவையில் இல்லை என்பதோடு கடந்த காலத்தில் ஒருபோதும் அவர்மீது சட்ட நடவடிக்கை தொடரப்பட்டிருக்கவில்லை என்றும் சான்றளிக்கிறேன்.

**(____________________________________________)**
**பரிந்துரைப்பவரின் பெயர், கையொப்பம்**

**இடம் :**

**நாள் :**